## பிப்ரவரி - 18

**"உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும், உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்"**
**- உபா 13 : 3**

யார் தேவனுடைய கிருபையினாலே இருதயத்தில் கர்த்தராகிய இயேசுவைப் போல ஆகிறார்களோ, அவர்களுக்கே ராஜ்யம் உரியது. அந்நிலையில் அவர்கள் கர்த்தரை தங்கள் முழு இருதயத்தோடும், தங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூர்ந்து, "கர்த்தாவே என்னுடைய சித்தத்தின் படியல்ல உம்முடைய சித்தத்தின் படியே ஆகக் கடவது" என்று சொல்லக் கூடியவர்களாவார்கள். கர்த்தருக்கு இந்த முழு கீழ்படிதலை விட, வேறு எந்த நிலைமையும் ராஜ்ஜியத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாக்காது. ஏனெனில், வேறு எந்த நிலைமையும் தேவனுக்கு முழு கீழ்படிதலையும், நிறைவான அன்பையும் குறிக்காது. தேவன் தம்மில் மிகவும் அதிகமாக அன்பு கூறுகிறவர்களுக்கு ஒதுக்கி வைத்திருக்கும் பரலோகத்துக்குரிய காரியங்களை "கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" என்பதை நாம் மறவாதிருப்போமாக.

**- Z ’98, 40 (R 2557).**

சோதிக்கப்பட்ட ஒரு ஜனத்தையே தேவன் தேடுகிறார். குணத்தின் ஒவ்வொரு நிலையிலும் விசுவாசமுள்ளவர்கள் என்ற நீருபிக்கப் பட்டவர்களையேத் தேடுகிறார். இந்தக் காரணத்திற்காக அவருடைய ஜனங்களின் ஜீவியத்தில் பலவகையான பராமரிப்புக்களை தேவன் ஏற்பாடு செய்கிறார். அதன் பலனாக, இந்த பராமரிப்புகளின் மத்தியில் அவர்கள் தங்களுடைய இருதயத்தின் நிலையை, அதாவது இந்த நிலையிலுள்ள தங்கள் பக்தி தேவனுக்கா, தனக்கா அல்லது உலகத்திற்கா என்று நிச்சயத்தோடு நிரூபித்துக் காட்டலாம். தேவனிடத்தில் தனக்கு பக்தி இருக்கிறது என்பதை நிச்சயத்தோடு நிருபித்துக் காட்டுகிற கிறிஸ்தவனே பாக்கியவான்!

**-P ’32, 15.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

ஆதி 22:1-14; உபா 8:2,5; 2நாளா 32:31; யோபு 1:8-22; 2:3-10; சங் 66:10-13; தானி 12:10; சகரி 13:9; மல் 3:2,3; 2தெச1:4,5; எபி 12:5-11; யாக் 1:2,3,12; 1பேது 1:6,7; 4:12-19; வெளி 2:10.

**கோபுர வாசிப்பு** : Z ’15, 341 (R 5799).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் எனக்குப் பரீட்சைகள் இருந்ததா? அவை என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?